# கண்ணன் செய்த உதவி

TA5118

**பாடம் 2**

**மூன்றாம் வகுப்பு**

**நோக்கங்கள்:**

இப்பாடத்தைக்  கற்பதன் வாயிலாக மாணவர்கள்;

தன்னைப்பற்றி உணர்ந்து தன்  குடும்பத்தில் உள்ளவர்க்கும், பிறர்க்கும் உதவும் திறனைப் பெறுவர்.

சாலை விதிகளைப் பற்றிய புரிதலும், அவற்றைப் பின்பற்றுவதர்க்கான அறிவையும் பெறுவர்.

வகுப்பறை கலந்துரையாடலில் கலந்து கொள்வதன் மூலம் பேசும் திறனைப் பெறுவர்.

சாலை விதிகள் மற்றும்  ஆபத்துக் கால வாகனங்கள் பற்றியறிந்து சொற்களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்வர்.

**கற்றல் செயல்பாடுகள்:**

ஆசிரியர் முதலில் 'கண்ணன் செய்த உதவி' என்ற பாடத்தை இப்படத்தைக் காண்பித்து அறிமுக உரையாடலை மாணவர்களிடையே நிகழ்த்துதல் . இவ்வுரையாடலின் போது பின்வரும் கேள்விகளை மாணவர்களிடையே வினவுதல்.



- இந்தப்படத்தில் என்னவெல்லாம் இருக்கின்றன?
- இந்தப் படத்தில் இருப்பது யார் யார் ?
- படத்தில் இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள்?
- படத்தில் இருக்கும் சிறுவன் எங்குச் செல்கிறான்?
- சாலையை எவ்வாறு கடக்க வேண்டும்?

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு மாணவர் கூறும் பதில்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் பின்வருமாறு உரையாடலைத் தொடரலாம்.
படத்தில் பள்ளிக்குச் செல்லும் மாணவன் ஒரு முதியவருக்கு சாலையைக் கடக்க உதவி செய்வதையும், அவன் பாதசாரிகளுக்கான இடத்தில் சாலையைக் கடப்பதையும் மாணவர்கள் புரிந்து கொண்டதை உறுதி செய்து கொண்டபின், அவர்கள் உரையாடிய சொற்களைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களை வாசிக்கச் செய்யவும்.

அடுத்தபடியாக, கீழுள்ள படத்தை மாணவர்களிடம் காண்பித்துப் பின்வரும் கேள்விகளை மாணவர்களிடையே கேட்க வேண்டும்.



- இந்தப் படத்தில் என்னவெல்லாம் இருக்கின்றன?
- என்ன நிகழ்கிறது?
- உன் மனநிலை எவ்வாறு இருக்கும்?
- அதைப்பார்த்தவுடன் நீ என்ன செய்வாய்?
- படத்தில் இருக்கும் மாணவன் என்ன செய்கிறான்?

மேற்குறிப்பிட்ட கேள்விகளுடன் மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து கலந்துரையாடச் செய்தல்.

பின்னர், அவற்றை அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளச் செய்தல். அவர்களையே கரும்பலகையில் எழுதச் செய்ய வேண்டும். பிழை இருப்பின் ஆசிரியர் சரிசெய்து மாணவர்களை வாசிக்கச் செய்யவும்.

அடுத்தபடியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் காண்பித்துப் பின்வரும் கேள்விகளை ஆசிரியர் மாணவர்களிடையே கேட்க வேண்டும்.




- இப்படத்தில் உள்ள பெரியவர் என்ன செய்கிறார்?
- படத்தில் உள்ள வாகனம் என்ன?
- இதற்கு முன் இந்த வாகனத்தைப் பார்த்திருக்கிறாயா?
- இவ்வாகனத்தின் பெயர் என்ன?
- சாலையில் இவ்வாகனம் வந்தால் என்ன செய்ய வேண்டும்?

இப்பொழுது மாணவர்களிடமிருந்து சரியான பதில்களைப் பெற்றபின், அவசரக் கால ஊர்திகளைப் பற்றிய தகவல்களை மாணவர்களுடன் கலந்துரையாடல் மூலம் பகிர்ந்து கொள்ளலாம் . உதாரணமாக தீயணைப்பு வாகனம், காவல்துறை வாகனம் ஆகியவற்றை அவர்களிடமிருந்து உரையாடல் மூலம் பெறலாம்.



- இப்படத்தில் யார் யார் உள்ளனர்?
- ஆசிரியர் என்ன கேட்டிருப்பார்?
- மாணவன் என்ன கூறியிருப்பான்?

பாடத்திற்குத் தொடர்புடைய அடுத்த படத்தை மாணவர்களிடையே கொடுத்து , மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கான பதில்களை மாணவர்களைக் குழுவாக அமர்ந்து கலந்துரையாடி எழுதச் சொல்லலாம். இதன் மூலம் குழுவாகச் செயல்படுதல், மற்றும் பேசுதல், எழுதும் திறன் வளர்கிறது. பின்னர் ஆசிரியர் அவற்றில் உள்ள பிழைகளைச் சரி செய்து மாணவர்களுக்கு உதவலாம். குழுவாகச் செயல்பட்டு எழுதியதை மாணவர்கள் வாசிக்கும் படி பணிக்க வேண்டும்.

**ஆசிரியர்க்கான குறிப்பு:**

**1.** மாணவர்கள் கூறுவதை அவர்கள் மொழியிலேயே கரும்பலகையில் எழுதுங்கள்.

**2.** அல்லது அனைத்து மாணவர்களின் ஒத்திசைவோடு, பாடப்புத்தகத்தில் வரும் வாக்கியங்களுக்கு நிகரான வாக்கியங்களை வரவழைத்து எழுதுங்கள்/ பாடப்புத்தகத்தில் உள்ள வாக்கியங்களைக் கண்டறிதல்.

**3.** இவ்வாறு செய்யும் போது, கேட்டல் – பேசுதல் – எழுதுதல் -வாசித்தல் ஆகிய நான்கு திறன்களுக்கு இடையே உள்ள தொடர்பை மாணவர்கள் தாமாகவே உணர்ந்து கொள்ள வாய்ப்பாக அமையும்.

**4**. பாடத்தை உரிய ஏற்ற இறக்கத்துடன் ஆசிரியர் வாசித்தல்.

**5.** பின் ஒவ்வொரு படமாகக் காட்டி, பாடத்தை ஏற்ற இறக்கங்களோடும் உணர்வுப்பூர்வமாகவும் வாசிக்க வேண்டும். குழந்தைகளின்  கவனம் முழுவதும் உங்களிடமே  இருக்க இது உதவும். இடையிடையே , என்ன நடந்திருக்கும் என்று அவர்கள் ஊகித்துக் கூற இடம் கொடுங்கள்.

குழந்தைகளின்  கற்பனை செய்தல், ஊகித்தறிதல், அனுமானித்தல், சிந்தித்தல், சூழலோடு பொருத்திப்பார்த்தல் போன்ற மொழித்திறன்களோடு சொற்களஞ்சியமும் பெருகும்.

----------